திரு. எஸ். செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட திருச்சி மாநகராட்சியின் வார்டு எண்கள் 30, 31, 7, 36, 28, 29 போன்ற பகுதிகளிலே பாதாளச் சாக்கடைப் பணிகள் முடிவடைந்த நிலையில் நீண்ட நாட்களாக பயன்பாடின்றி உள்ளது. எனவே, இத்திட்டத்தைச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்ட பகுதிகளில் ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு உரிய செயல்பாடுகள் முடுக்கி விடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விடைகள் பாதாளச் சாக்கடைகள்போல நீண்டுகொண்டே போவதால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வி. கருப்பையா, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி ஆகியோர், இந்தப் பாதாளச் சாக்கடை அமைக்கின்ற திட்டம் குறித்து மாண்புமிகு அமைச்சரிடத்திலே எழுதிக்கொடுத்து விடுங்கள். அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்.*

வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

33—

முதியோர் இல்லங்கள்

****2990—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் முதியோர் இல்லங்களை மாவட்டந்தோறும் உருவாக்கி பராமரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 ஏப்ரல் 3]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மாநில அரசின் மானியம் பெற்று 28 முதியோர் இல்லங்களும் மத்திய அரசின் மானியம் பெற்று 50 முதியோர் இல்லங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர, ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் முதியோருக்கும், ஆதரவற்ற குழந்தைகளுக்கும் சிறப்பு இல்லங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த வளாகம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கேற்ப, மாவட்டம் ஒன்றிற்கு இரண்டு ஒருங்கிணைந்த வளாகங்கள் வீதம் 32 மாவட்டங்களில் 64 ஒருங்கிணைந்த சிறப்பு வளாகங்கள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் கல்வியானாலும் சரி, பொருளாதாரமானாலும் சரி, வளர்ந்து வருகின்ற இந்தச் சூழ்நிலையிலே, ஆங்காங்கே தாயும் தந்தையரும் இன்று அனாதைகளாகச் சுற்றித் திரிகின்ற சூழ்நிலை இருக்கிறது. மகனைப்பற்றிக் கேட்டால் அமெரிக்காவில் இருக்கிறான்; மகளைப்பற்றிக் கேட்டால், ரஷ்யாவில் இருக்கிறார் என்று சொன்னாலுங்கூட அவர்கள் பெற்றோரைக் கவனிக்காமல் விடுகின்ற காரணத்தால் அவர்கள் சுற்றித் திரிகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அரசு முதியோர் இல்லங்களைக் கட்டித் தருவாரா என்பதை மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—30

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளைகள் அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் இருந்தாலும்கூட, நான் இருக்கிறேன் தாயாக என்று சொல்லி, தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் இந்த முதியோர்களைக் காப்பாற்றுவதற்காகவே ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்படும் என்று ஆணையிட்டு சமீபத்திலேதான் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, 23 மாவட்டங்களில் 46 வட்டாரங்களில் மொத்தம் ரூ. 7,33,17,500 செலவில் ஆதரவற்ற முதியோரும் குழந்தைகளும் தங்குவதற்கான ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைப்பதற்கு கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேண்டிபாண்டியார் கோட்டத்தில் ஓர் ஆரம்பப் பள்ளி இருக்கிறது. அதில் 9 ஆண்டுகளாக சத்துணவு போடவில்லை. அங்கே சத்துணவு போடுவதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, இது சம்பந்தம் இல்லாத கேள்வி.*

திரு. மு. திராவிடமணி: *சம்பந்தமில்லாத கேள்விதான், தொடர்பு இல்லாத கேள்விதான், இருந்தாலும் . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவும்.*

வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

விவசாய இடுபொருட்கள்

***7922—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு விவசாய இடுபொருட்கள் வழங்கப்படும் விவரத்தினை விளம்பரம் மூலமாகத் தெரியப்படுத்த அரசு முன்வருமா?